සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 08 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

## பகுதி – I

**மிகச் சரியான விடையினை தெரிவு செய்து கோடிடுக.**

1) ‘குழந்தைமொழிகள் சொல்கின்றாய்’’ இங்கு குழந்தை என்பதன் பொருள்.

1. குழவி 2. மஞ்சுகம் 3. சிறுவன் 4. சிறுமி

2) சத்துருக்கனுக்கு, தான் ராமன் தம்பி அல்லையோ என்று நினைக்கும் போது இளிவரலும் தோன்றிற்று. இங்கு இளிவரல் என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்.

1. சந்தேகம் 2. வியப்பு 3. பயம் 4. அருவருப்பு

3) இரு மடங்கு இலாபம் வியாபாரத்தில் சம்பாதித்தது. இலாபம் என்பதன் எதிர்ப்பதம்.

1 மிகுதி 2. செல்வம் 3. நட்டம் 4. செலவு

4) கர்ணனுக்கு நண்பன் துரியோதனன். நண்பன் என்பதன் எதிர்ப்பதம்.

1. பகைவன் 2. எதிரி 3. உறவினன் 4. சகபாடி

5) செயலை உணர்த்தி நிற்கும் சொல்.
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. தெரிநிலைவினை 4. துனிவினை

6) சீதையினது அழகு கம்பரையே கவர்ந்துவிட்டது. இந்த வாக்கியத்தில் இடம்பெறும் வேற்றுமை உருபு.
1. ஏழாம் வேற்றுமை 2. ஐந்தாம் வேற்றுமை 3. ஆறாம் வேற்றுமை 4. மூன்றாம் வேற்றுமை

7) இடுகுறிப்பெயருக்கு உதாரணமாய் அமையும் சொற் கூட்டத்தைத் தெரிவு செய்க.
1. பறவை, வளையல் 2. மரம், கல் 3. அணி, கணக்காளன் 4. முள்ளி, மண்வெட்டி

8) மெல்லின மெய் எழுத்துகளாவன.
1 ங்,ந் 2. ய்,ர் 3. க்,ச் 4. ந்,த்

9) கிரந்த எழுத்துக்கள் மட்டும் உள்ள கூட்டம்.
1. ஒ, ஔ, ஐ, ஸ
2. ஜ, ஸ, ஹ, ஸ்ரீ
3. ஸ்ரீ, ஹ, ஐ, ஓ
4. ஜ, ச, ஒ, ஷ

10) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை.

1. 247 2. 216 3. 30 4. 12

11) அழகு, தேன், தெய்வம் ஆகிய பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்.
1. முருகு 2. நறை 3.அமுதம் 4. கோயில்

12) அழுகை, துன்பம் , இனிமை ஆகிய பெயர்ச் சொற்கள்.

1. பொருட்பெயர் சார்ந்தவை
2. தொழிற்பெயர் சார்ந்தவை
3. குணப்பெயர் சார்ந்தவை
4. சினைப்பெயர் சார்ந்தவை



kalvi.lk

13) பின்வருவனவற்றுள் இருவேறுபட்ட பொருள் தரும் பதம்.

1. முடி 2. பொன் 3. வழி 4. விழி

14) பின்வருவனவற்றுள் இணைமொழி.

1. கடகட 2. மெல்லமெல்ல 3. அல்லும் பகலும் 4. பென்னம் பெரிய

15) “உப்பில்லாப்பண்டம் குப்பையிலே” இப்பழமொழியின் கருத்து.

1. உப்பில்லாவிடின் குப்பையில் எறிய வேண்டும்.
2. உணவை உப்பிட்டு உண்ண வேண்டும்.
3. பயனற்ற விடயம் உயர்வற்றது.
4. உப்பின்றி உண்ணலாகாது.

16) ………………….. கடல் ஓடியும் திரவியம் தேடல் வேண்டும்.

1. சீலை 2. போர்வை 3. திரை 4. திறை

17) ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபு ........................ ஆகும்.

1. ஆல் 2. இல் 3. ஐ 4. கு

18) அறுபதாவது ஆண்டு விழா…………….. எனப்படும்.

1. மணிவிழா 2. பவளவிழா 3. அமுதவிழா 4. காகிதவிழா

19) Microscope ஊழிக்கான கலைச் சொல் ……………. ஆகும்.

1. தொலைகாட்டி 2. தொலைநோக்கி 3. நுணுக்குக்காட்டி 4. திசையறிகருவி

20) குறிப்பு வினையாய் அமைந்த சொல் ........................ ஆகும்.

1. வந்தான் 2. பாடியது 3. செல்வன் 4. ஓடினான்

(2 x 20 =40 புள்ளிகள்)

## பகுதி (II)

**முதலாம் இரண்டாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

***01)*** கணிப்பீட்டிற்காக மேற்கொண்ட கதை தயாரித்தலை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

I. கதையின் தலைப்பு யாது?
II. கதை தயாரிப்பதற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் 3 தருக.
III. இக் கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது எதிர் நோக்கிய பிரச்சினைகள் எவை?
IV. பிரச்சினைகளை எவ்வாறு நிவர்த்தி செய்து கொண்டீர்கள்?
V. இக்கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் எவை?

(15 புள்ளிகள்)

***02)*** பின்வரும் தலைப்புகளுள் ஒன்றினை தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.

I. கடற்கரைக்காட்சி…
II. நான் விரும்பும் பெரியார்…
III. விஞ்ஞானத்தின் விந்தை...
IV. ஒரு மாளிகையின் சுயசரிதை…
V. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்…

(15 புள்ளிகள்)


kalvi.lk

**_03)_** சுகயீனம் காரணமாக பாடசாலைக்குச் சமுகம் அளிக்காத நண்பருக்கு நடந்து முடிந்த இல்லவிளையாட்டுப் போட்டிபற்றி 75 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

**_04)_** பாட நூலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

I. கூண்டிற் கிளி பாடலை இயற்றியவர் யார்?
II. ‘‘ஐய “வேண்டுவது உண்டு அவ்வரம் தரப்பாற்று’’ என்ற கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
III. கட்புலனைப் பொறுத்தவரையில் பறவைகள் பெற்றுள்ள உயர்வான இசைவாக்கம் எத்தகையது?
IV. இராபர்ட் புரூஸின் வெற்றிக்குக் காரணம் யாது? வெற்றிக்கான படிப்பினையை எதனிடமிருந்து பெற்றுக் கொண்டார்?
V. நூல்களை வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

**_05)_** பின்வரும் பழமொழிகளில் உள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.
I. ஆளை மோதும் போதே தலை முளுகு.
II. பகையாழி பகையை உரவாடிக் கொடு.
III. வேளைக் கல்லிக்குப் பிள்ளைச் சாட்டு.
IV. எட்டி பலுத்தென்ன ஈயாதார் வாளந்தென்ன.
V. பலக பலக பாலும் புலிக்கும்.

(10 புள்ளிகள்)

**_06)_** பின்வரும் சொல் ஒவ்வொன்றையும் வைத்து தனித்தனி வாக்கியம் அமைக்குக.

I. சாதம் :
II. வாய்மை :
III. இடைஞ்சல் :
IV. சேனை :
V. ஐயப்பாடு :

(10 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457